**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, தஞ்சாவூர்.**

**முன்னிலை: செல்வி. S. T. கனிமொழி, L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.I, தஞ்சாவூர்.**

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் திங்கள் கிழமை

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 02 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.77/2026**

**CNR NO.TNTJ05-000559-2026**

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,

மாவட்ட குற்ற பிரிவு காவல்நிலையம், தஞ்சாவூர்.

குற்ற எண்.03/2026. ....குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

1) காமராஜ், வயது 60/2026, த/பெ. சீனிவாசன்,

எண்.4, வடக்குத்தெரு, அந்தணர்குறிச்சி, திருவையாறு தாலுக்கா,

தஞ்சாவூர் மாவட்டம்.

2) ராமச்சந்திரன், வயது 64/2026, த/பெ.முத்துக்கண்ணு,

மெயின்ரோடு, வண்ணாரபாளையம், கடலூர். ....எதிரிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 07.02.2026 அன்று சி.சி.எண்.77/2026 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, 13.03.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டதில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. C. வெங்கடேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....,

## தீர்ப்புரை

### I) குற்ற அறிக்கையின் சுருக்கம்-

இவ்வழக்கின் வாதியும் சாட்சி-1 மான திருமதி. சத்யா தஞ்சாவூர் சச்சிதானந்த

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.16 11:51:32 +0000

மூப்பனார் ரோட்டில் உள்ள சிறுவர் சீர்திருத்தப்பள்ளியில் துப்புறவு பணியாளராக பணிபுரிந்து தற்போது வயது மூப்பின் காரணமாக பணிஓய்வு பெற்றவர் என்றும், இவ்வழக்கில் எதிரிகள் சாட்சி-1 வேலை பார்த்து வந்த தஞ்சாவூர் சிறுவர் சீர்திருத்தப்பள்ளியில் முறையே தோட்ட பணியாளர் மற்றும் சமையலராக பணிபுரிந்த ஊழியர்கள் என்றும், கடந்த 2019 ம் ஆண்டு சாட்சி-1 னிடம் எதிரிகள் இருவரும் தங்களுக்கு அரசு உயர் அதிகாரிகளுடன் நன்கு பழக்கம் உள்ளது என்றும் தாங்கள் அதனை பயன்படுத்தி சாட்சி-1 ன் மகனான சாட்சி - 2 க்கு முனிசிபாலிட்டி அல்லது சீர்திருத்த பள்ளியிலேயே வேலை வாங்கி தருவதாக ஆசைவார்தைகள் கூறி சாட்சி -1 க்கு நம்பிக்கை ஏற்படுத்தியதன் பேரில் சாட்சி-1 தனது மகனுக்கு அரசு வேலை வாங்குவதற்காக 1 வது எதிரிக்கு ரூ.1,40,000/-தையும் 2 வது எதிரிக்கு பல்வேறு தேதிகளில் வங்கி கணக்கு மூலமாக ரூ.1,90,000/-ஐ கொடுத்துள்ளதாகவும், இவ்வாறாக சாட்சி-1 னிடமிருந்து எதிரிகள் சாட்சி-2 க்கு வேலை வாங்கி தருவதாக ஆசைவார்த்தைகளை கூறி நம்பவைத்து ரூ.3,30,000/-ஐ பெற்றுக்கொண்டு இருவரும் சாட்சி-1 னிடம் சொன்னபடி சாட்சி-2 க்கு எந்த ஒரு வேலையும் வாங்கிதராமலும் எதிரிகள் வேலை வாங்கி தருவதாக கூறி வாங்கிய பணத்தை திருப்பிதராமல் சாட்சி-1 ஐ ஏமாற்றி நம்பிக்கை மோசடி செய்து குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, DCB காவல்நிலைய காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது இதச பிரிவுகள்.406, 420 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

II) இந்நிலையில் வழக்கு விசாரணையின் போது இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.16 11:51:40 +0000

ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டு, பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், பார்வையிட்டும், எதிரிகள் மீது இதச பிரிவுகள்.406, 420 ன் கீழான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, குற்றச்சாட்டை விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் மேற்படி குற்றங்களை மறுத்து குற்றவாளிகள் இல்லை என்றார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

III) இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அசாஆ.1 முதல் அசாஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**IV) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு யாதெனில்,**

IV. 1) இவ்வழக்கில் அ.சா.1 சத்யா தன்னுடைய முதல் விசாரணையில் "தனது மகன் செந்தில்குமாருக்கு முனிசிபல் அல்லது வேறு ஏதாவது ஒரு அலுவலகத்திலோ வேலை வாங்கி தருவதாக கூறியதற்கு காமராஜும், ராமச்சந்திரனும் தன்னிடம் பணம் கேட்டதாகவும், காமராஜ் தனக்கு தரவேண்டிய ரூ.3,30,000/- பணத்தை தந்துவிட்டதாகவும், தற்போது தாங்கள் சமாதானமாக சென்றுவிட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தன்னுடையது தான் என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்கள்.

IV. 2) மேலும் அ.சா.2 ரவிமதி காவல் ஆய்வாளர் தன்னுடைய முதல்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.16 11:51:48 +0000

விசாரணையில் "கடந்த 13.01.2026 ம் தேதி 13.00 மணியளவில் D.No.1576/2025 தேதி 26.09.2025 தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 அவர்களிடமிருந்து வரபெற்ற கடிதத்தை பெற்று, பார்வையிட்டு பின்பு மனுதாரரிடமிருந்து புகாரை பெற்று நிலைய குற்ற எண்.03/2026, சபி.406, 420 இதசவின் படி வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், பின்பு வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துகொண்டு நடந்த சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில் 1வது எதிரி திருவையாறு அருகிலுள்ள அந்தனகுறிச்சி வடக்கு தெரு, வீட்டு எண்4 முன்பு நின்று கொண்டிருந்தவரை போலீஸ் பார்டிகளை கண்டதும் ஓட முயன்றவர்களை பிடித்து விசாரித்ததில் அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதிலளித்தவரை காரணம் கூறி கைது செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

IV. 3) மேலும் அசா.2 தனது சாட்சியத்தில் எதிரி தாமாக குற்றத்தை ஒப்புகொண்டு அவர் எவ்வித அச்சுறுத்தலும், துன்பறுத்தலும் இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை தனிநபர்கள் சாட்சிகள் எவரும் முன்வராததால் போலீசார் முன்னிலையில் பதிவு செய்தும், பின்பு 1வது எதிரி தம்மிடமிருந்து தாமாக எடுத்து ஆஜர் செய்த Redmi செல்போனை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றறுதல் மகசரில் கைப்பற்றியும், பின்பு வழக்கு சொத்து மற்றும் எதிரியை நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், 2வது எதிரி தஞ்சாவூர் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் Crlmp No. 721/2026, 05.02.2026 ல் முன் ஜாமீனில் சென்றதால்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.16 11:51:54 +0000

அவரை கைது செய்ய இயலவில்லை என்றும், 2 வது எதிரி கணக்கு வைத்துள்ள பாங்க் ஆப் பரோடா வங்கி கணக்கின் பரிவர்த்தனை சாட்சி-1 எதிரிக்கு பணம் அனுப்பிய ரூ.1,90,000/-க்கான வங்கி ரசீது (4) பின்பு இவ்வழக்கில் தனது புலன் விசாரணை முடித்து கொண்டு சாட்சிகளின் வாக்குமூலங்களின் இருந்தும், புலன் விசாரணையிலிருந்தும் மேற்படி எதிரிகள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது மேற்படி இதச பிரிவுகளின் படி 02.02.2026 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

V) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 புகார்தாரராகவும், அ.சா.2 சம்பவத்தை புலன் விசாரணை மேற்கொண்ட புலன்விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் ரவிமதி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

VI) இந்நிலையில் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமான சங்கதிகளை குறித்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எடுத்துக்கூறி விளக்கி வினவிய போது அரசு தரப்பு சாட்சியம் பொய் என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்கள்.

VII) **இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீது இதச பிரிவுகள். 406, 420 ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசுத் தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பது தான்.**

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.16 11:52:01 +0000

1) இவ்வழக்கில் அரசு தரப்பில் ஆஜரான அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் அசாஆ.1 முதல் அசாஆ.7 வரையான சான்றாவணங்கள் படியாக, எதிரிகள் மீது இதச பிரிவுகள். 406, 420 ன் கீழான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிகளை மேற்படி குற்றத்தின் படியாக தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

2) எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சம்பவத்தை பற்றி புகார் கொடுத்த சாட்சியான அசா.1 தனது முதல் விசாரணையில் "தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும்" சாட்சியம் அளித்துள்ளதாலும், அ.சா.2 விசாரணை அதிகாரி சாட்சியம் மட்டுமே எதிரிகள் மீது இதச பிரிவுகள். 406, 420 ன் கீழான குற்றத்தினை நிரூபணம் செய்யக்கூடியதாக இல்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

3) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

4) அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 சம்பவத்தை பற்றி புகார் கொடுத்த சாட்சியாகவும், அ.சா.2 சம்பவத்தை புலன் விசாரணை மேற்கொண்ட அதிகாரி சாட்சியம் அளித்துள்ளார்கள்.

5) அரசு தரப்பு வழக்கின்படி எதிரிகள் கடந்த 2019 ம் ஆண்டு சாட்சி-1 னிடம்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.16 11:52:06 +0000

சாட்சி-1ன் மகனான சாட்சி-2க்கு முனிசிபாலிட்டி அல்லது சீர்திருத்த பள்ளியிலேயே வேலை வாங்கி தருவதாக ஆசைவார்தைகள் கூறி 1வது எதிரிக்கு ரூ.1,40,000/-தையும் 2 வது எதிரிக்கு பல்வேறு தேதிகளில் வங்கி கணக்கு மூலமாக ரூ.1,90,000/-ஐ சாட்சி-1 கொடுத்துள்ளதாகவும், ரூ.3,30,000/-ஐ பெற்றுக்கொண்டு எதிரிகள் சாட்சி-1னிடம் சொன்னபடி சாட்சி-2க்கு எந்த ஒரு வேலையும் வாங்கிதராமலும் பணத்தை திருப்பிதராமல் சாட்சி-1ஐ ஏமாற்றி நம்பிக்கை மோசடி செய்து குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, தஞ்சாவூர் மாவட்ட குற்ற பிரிவு காவல்நிலைய ஆய்வாளரால் எதிரிகள் மீது இதச பிரிவுகள்.406, 420ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இந்நிலையில் அசா.1 தனது முதல் விசாரணையில் "தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் அசா.1 எதிரிகளுடன் சமாதானமாகி சென்றுள்ளதாக முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

7) இந்நிலையில் நமது மாண்பமை உச்சநீதிமன்றம் முன்தீர்ப்புகளான **மோகன் அபோட் எதிர் பஞ்சாப் அரசு** 2008 (3) MLJ Crl 212 SC **மற்றும் மருத்துவர் அரவிந்த பர்சால் எதிர் மத்திய பிரதேச அரசு** 2008 (3) MLJ Crl 1517 SC என்ற முன்தீர்ப்புகளின் சாரம்சம் என்னவென்றால்,

**"தனி நபர் சார்ந்த எந்த ஒரு பிரச்சனையிலும் அரசு தரப்புக்கு சாதகமான முடிவினை எட்ட முடியாத நிலையில் வழக்கு இருக்குமேயானால் அந்த வழக்கை நிலுவையில் வைத்திருப்பது ஓர் ஆடம்பரமே என்பதால் நீதிமன்றமே**

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.03.16 11:52:12 +0000

**குற்றவியல் நடவடிக்கைகளில் பொதுவான சமாதானத்தை ஏற்றுக்கொண்டு நீதிமன்றத்தின் நேரத்தை சேமித்து அதை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண்பதில் செலவிட முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.**"

மேலும் முக்கிய சாட்சி சமாதானத்தின் அடிப்படையில் வழக்கை மேல் நடத்த விரும்பாதபட்சத்தில் குற்ற வழக்கை மேல் நடத்துவது சட்டத்திற்கு புறம்பான ஒரு செயல் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

8) இந்நிலையில் அரசு தரப்பு சாட்சியான முக்கிய சாட்சியான புகார்தாரர் அசா.1 எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதாக கூறியுள்ளதாலும், காவல்துறையினர் சாட்சியம் மட்டுமே குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுத்தர போதுமான சாட்சியாக அமையவில்லை. ஆகவே அரசு தரப்பு வழக்கை போதிய சாட்சியத்தின் அடிப்படையில் அரசு நிரூபிக்க தவறிவிட்டமையால் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அளித்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

VIII) இறுதியாக அரசு தரப்பு குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள் மீது இதச பிரிவுகள். 406, 420 ன் கீழ் சுமத்திய குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியதால் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அளித்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை மேற்கண்ட பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.16 11:52:17 +0000

9) இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தடயப்பொருட்களான Redmi 9 Power ஆரஞ்சு நிற செல்போனை அதன் உரிமையாளர் ஒரு மாதத்திற்குள் உரிய மனு செய்து பெற்றுக்கொள்ளவும், மேல்முறையீட்டு காலத்திற்கு பிணை முறியை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. (சி.பி.எண். 14/2026)

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.03.16 11:52:24 +0000

நீதித்துறை நடுவர் எண்.I,

தஞ்சாவூர்.

**அரசு தரப்பு விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

அ.சா.1 -- திருமதி. சத்யா (புகார்தாரர்)

அ.சா.2 -- திருமதி. ரவிமதி (காவல் ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | எந்த சாட்சியின் மூலம் குறியீடு செய்யப்பட்டது |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.01.2026 | புகார் மனுவிலுள்ள அசா.1 ன் கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 12.01.2026 | புகார் மனு | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | 13.01.2026 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | 14.01.2026 | ஒப்புதல் வாக்குமூலம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | 14.01.2026 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.6 | 31.10.2019 | 2 வது எதிரி கணக்கு வைத்துள்ள பாங்க் ஆப் பரோடா வங்கி கணக்கின் பரிவர்த்தனை | அ.சா.2 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.7 | 23.11.2020 | சாட்சி-1 எதிரிக்கு பணம் அனுப்பிய ரூ.1,90,000/-க்கான வங்கி ரசீது (4) | அ.சா.2 |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்:**

1) Redmi 9 Power ஆரஞ்சு நிற செல்போன்

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.03.16 11:52:32 +0000

நீதித்துறை நடுவர் எண்.I,

தஞ்சாவூர்.

<u>**குறிப்பு:**</u>

1) வழக்கு விசாரணையின் போது எதிரிகள் ஜாமீனில் இருந்தார்கள்.

2) எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.